Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 345 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 16 ஆம் நாள் றஜப் பிறை 26 (1-12-64) செவ்வாய்க்கிழமை இதழ் 292

எந்நேரத்திலும் திருப்தியளிக்கிறது

அண்ணா கோப்பி

இன்றே கேட்டு வாங்குங்கள்!

ஏக விநியோகஸ்தர்கள் :

மில்க்வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

# 'பௌத்தருக்கு கருணை தியாகம் மிகமுக்கியம்'

## சாரநாத் மகாநாட்டில் தாய்லாந்து இளவரசி

### "துன்பத்திலிருந்து விடுதலை பெற புத்தபிரானின் போதனை துணைபுரியும்"

—ராதாகிருஷ்ணன்

சாரநாத், நவ. 30

"பௌத்த மக்கள் தன்னலத் தியாகம் உடையவர்களாக இருக்க வேண்டும். கருணைக்கும் அன்புக்கும் எடுத்துக்காட்டாக அவர்கள் விளங்க வேண்டும். புத்தபிரானின் இந்தப் போதனைகளைக் கடைப்பிடிக்கும் மக்களே உண்மையான பௌத்தர்களாக விளங்க முடியும்" என்று தாய்லாந்து இளவரசி பூனாம் தெரிவித்துள்ளார்.

வாரணாசிக்கருகிலுள்ள சாரநாத்தில் நடைபெற்றுவரும் ஏழாவது உலக பௌத்தர்கள் தோழமை மகாநாட்டின் இரண்டாமநாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் தான் தாய்லாந்து இளவரசி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இளவரசி தொடர்ந்து பேசுகையில், பௌத்த மக்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென்றும் பௌத்தர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள், கருணை மனப்பான்மையுடன் மற்றையோரை மதித்து நடக்க வேண்டுமென்றும் கூறினார்.

### 'புத்தரின் போதனையை பின்பற்றுக"

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்று இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், புத்தபிரானின் போதனைகள் ஆத்மீகம் நிறைந்தனவாக இருக்கின்றன என்றும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு புத்தபிரானின்போதனைகளை மக்கள் பின்பற்றவேண்டுமென்றும் கூறினார்.

மகாநாட்டையொட்டி உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஆசிச் செய்திகள் இங்கு வந்துகொண்டிருக்கின்றன. இந்த மகாநாட்டில் இந்தியா, இலங்கை, பிரிட்டன், மலேசியா, தென் வியட்னாம், அமெரிக்கா, சோவியத்யூனியன் ஆகிய நாடு

(6-ம் பக்கம் பார்க்க)

## ரூ. 4000 பெறுமதி பாக்குமூடைகள் கைப்பற்றப் பட்டன!

### இராணுவத்தினரிடம் சந்தேகநபர் டிமிக்கி!

மாவிட்டபுரம், திங்.

வல்வெட்டித்துறை ராணுவ முகாமிலுள்ள ராணுவத்தினர் பொலி கண்டி கடற்கரையில் நேற்று நாலாயிரம் ரூபா பெறுமதியுள்ள 14 பாக்கு மூடைகளையும் 500 ரூபா பெறுமதியுள்ள கட்டுமரமொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கட்டுமரத்தையும் பாக்கு மூடைகளையும் ராணுவத்தினர் கைப்பற்றிய பொழுது அங்கு நின்ற ஒரு நபரும் ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார், இதுபற்றி ராணுவத்தினர் அந்த நபரிடம் விசாரித்த பொழுது தமக்கு இதில் சிறிதளவேனும் சம்பந்தம் கிடையாதென்றும் இதில் உண்மையான தொடர்பு கொண்டவர் தமக்குத் தெரியுமென்று கூறி ஒரு வயோதிபரை அந்த நபர் காட்டினராம். ராணுவத்தினரும் இதை நம்பி அங்கு நின்ற வயோதிபரைக் கைது செய்யச் சென்ற பொழுது உண்மையான 'கடத்தல் காரரான' அந்த நபர் தப்பியோடிவிட்டாரென்றும் கூறப்படுகிறது.

பாக்கு மூடைகளும் கட்டுமரமும் வல்வெட்டித்துறை சுங்கப்பகுதியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக உதவிகலெக்டர் விசாரணைகள் நடத்துகின்றார்.

## 'கள்ளத்தோணி' எனகூறி கப்பம்கேட்ட 'பொலிசார்'!

### இன்ஸ்பெக்டர்வந்ததும் ஓட்டம்பிடித்தனர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் இருபது வருடங்களுக்குமேல் வசித்து வரும் ஒருவரிடம் இருவர் சென்று தாங்கள் இரகசியப் பொலிசார் என்று தெரிவித்து அவரை 'கள்ளத்தோணி' எனக் கைது செய்யப்போவதாகவும் இல்லையேல் 'கப்பம்' கட்டுமாறும் மிரட்டினராம்.

முதலில் ஐநூறு ரூபாய் தரும்படி மிரட்டிய அந்த இருவர், பின்னர் அவர்களுடன் சென்ற ஒரு 'தரகரின்' முயற்சியினால் நூறு ரூபாய் தரும்படி கேட்டனராம். யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் வசிக்கும் அந்த நபர் தம்மிடம் பணம் சிறிது குறைவாக இருப்பதாகத் தெரிவித்து தனக்குத் தெரிந்தவரிடம் பணம்வாங்கிக்கொண்டு வருவதாகக்கூறிவிட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச்சென்று விபரத்தைத்தெரிவித்ததாகவும் அதன்பின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவருடன் வீட்டுக்குச்சென்றபோது இரகசியப் பொலிசார் எனச் சொல்லிக்கொண்ட இருவரும் ஓட்டம் பிடித்துவிட்டதாகவும் தெரியவருகிறது.

இவர்களிருவரையும் அடையாளம் காணப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகிறது. இதுபற்றி யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் விசாரணை நடத்திவருகிறார்.

## பிரதமர் விஜயம்

மாவத்தகம திங்கள்

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மாவத்தகம தொகுதிக்கு முதற்தடவையாக வியாழக்கிழமை விஜயம் செய்வார். அவருடன் மந்திரிகளும் எம். பி.க்களும் இங்கு வருவார்கள்.

சதிவழக்கு

## 'ராஜபக்ஷவின்' எச்சரிக்கை ஆதாரமற்றது'

### ஜி ஜி. தொடர்ந்து தொகுப்புரை

கொழும்பு, திங்கள்

'ராஜபக்ஷ, வியனகேயிடமும் சேரமிடமும் கேள்விகள் கேட்டிருந்தாரெனில் அவர் தாம் ஒரு உளவாளியாக இருந்தார் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் தாம் அவ்விதம் கேள்விகள் கேட்டிருந்தால் தாம் சந்தேகிக்கப் பட்டிருக்கலாம் என்ற வலுவற்ற விளக்கம் தந்துள்ளார் ராஜபக்ஷ" என சதிவழக்கில் அதிகமான எதிரிகள் சார்பில் ஆஜராகும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. தமது தொகுப்புரையைத் தொடர்ந்து நிகழ்த்துகையில் இன்று குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில் திரு. ஜி. ஜி. தமது தொகுப்புரையை நிகழ்த்துகையில் லயனல் குணத்திலகா, டொன்லி சேனநாயகா ஆகியோரது வாக்கு மூலங்கள் ஒலிப்பதிவு செய்யப் பட்டன என்பதற்கு எதுவித ஆதாரமும் கிடையாது என்றார்.

அவர் தமது தொகுப்புரையில் மேலும் கூறியதாவது;

1962 ம வருடம் ஜனவரி 11-ம் திகதிக்கு முன்னரே தாம் ஒரு உளவாளியாக சகல வித தகவல்களையும் சேகரிக்கத் தொடங்கி விட்டதாக ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சதி சந்தேக நபர்கள் என தாம் கருதுபவர்களுக்கு எதிராக இவற்றை பாவிக்கலாமென தாம் எண்ணியதாகவும் அவர் கூறியுள்ளார்,

சதியொன்று இடம் பெறவிருப்பதாக தாம் நம்பியதாகவும் இதனால் தம்மால் சேகரிக்கக் கூடிய சகல தகவல்களையும் தாம் சேகரிக்க அக்கறை காட்டியதாகவும் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் இரவு விருந்தின் போதும் விருந்து முடிந்த பின்னரும் ஒரு கேள்வியைத்தானும் அவர் கேட்காதிருந்திருக்கிறார்.

சேரம் சதியின் தலைவராக ராஜபக்ஷவினால் சிருஷ்டிக்கப்பட்டார், ஆனால் ராஜபக்ஷ வியனகேயிடம் சேரம பற்றி ஒன்றும் கேட்கவில்லை இதே போல, 26-ம் திகதி இரவு மெக்போன் அவென்யுவில் சந்தித்தபோது வியனகே

(6-ம் பக்கம் பார்க்க)

## மஜீத் உதவி மந்திரி

கொழும்பு, திங்கள்

மூதூர் இரண்டாவது எம். பி ஜனாப் ஏ. எல். அப்துல்மஜீத் உதவி பொது மராமத்து மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாப் கே. அப்துல் ஜபார் காலமானதைத் தொடர்ந்து இப்பதவி காலியாக இருந்தது.

## புகையிரத பொருட்காட்சி

### பிரதமர் ஆரம்பிப்பார்

கொழும்பு, திங்கள்

புகையிரத சேவையின் நூற்றாண்டு விழாவையொட்டிய புகையிரத பவனியை பிரதமர் நாளை காலை கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் ஆரம்பித்துவைப்பார் இலங்கை அரசாங்க மந்திரிகள் ஒவ்வொருவருடைய சேவையையும் விளக்கும் காட்சிகளுடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் இந்த புகையிரதம் பவனி வரும். இப்புகையிரதம் யாழ்ப்பாணத்துக்கும் வரும்.

## வழக்கறிஞர் தொடர்ந்த வழக்கு வெற்றி

கொழும்பு, திங்கள்

கொழும்பைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. எ. வி. குணவர்த்தனவுக்கு இலண்டன் புல் செல்வதற்கான அவசிய பத்திரங்கள் வழங்கப்படவேண்டும் என நீதியரசர்கள் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. சிறிமானே, திரு. மாணிக்கவாசகர் ஆகியோரடங்கிய டிவிஷனல் பெஞ்ச் உத்தரவிட்டது.

அபிவிருத்தியடைந்து வரும் ஆசியாவில் ஜனநாயகம் என்பது பற்றி விவாதிக்க இலண்டன்புல்லில் நடைபெறும்சர்வதேச மகாநாட்டில் கலந்துகொள்ள தமக்கு அவசியமான பத்திரங்களை வழங்குமாறு கிராந்தரக்காரியதரிசி திரு. என் கியு. டயஸுக்கும் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். ஈ. பி. ஜயஸூரியவுக்கும் உத்தரவிடவேண்டுமென மனுதார கோரியிருந்தார். இந்தவழக்கு செலவு தொகை அளிக்கவும் தகுதியானது. என நீதிமன்றம் தெரிவித்தது. மனுதாரரின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. எச். டபிள்யு ஜயவர்த்தன 210 ரூபாய் செலவுத்தொகை அளித்தால் போதுமானது எனக் கூறினார்.

### மணிவாக்கு

எல்லாக் கலைகளையும்விட வாழ்க்கை பெரிது. இதை விடவும் ஒரு படிமேலே செல்லுகிறேன். பூரணத் துவத்தை எட்டும் வாழ்க்கையைக் கொண்ட மனிதன்தான் பெரிய கலைஞன். சீலம் நிறைந்த வாழ்க்கையின் கட்டுக்கோப்பும் அடிப்படையும் இல்லாத கலை என்ன கலை?

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna
Phone 389

குரோதி ஆண்டு
கார்த்திகை மீ 16 உ (1-12-64


## ரயில்வேயின் நூற்றாண்டு விழா

இலங்கைப் புகையிரதப் பகுதியினர் தமது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை இன்று ஆரம்பிக்கின்றனர். இவ்விழா வெற்றிகரமாக நிறைவேற நாமும் வாழ்த்துகிறோம்.

நூற்றாண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் புகையிரதப் பகுதியினர் ரயில் சேவையில் சீர்திருத்தங்கள் செய்து பொதுமக்களின் ஆதரவையும் பெற வேண்டும். ரயில்கள் குறித்த நேரத்துக்குச் சேவை செய்கின்றன என்ற நற்பெயர் இலங்கை புகையிரதப் பகுதிக்குக் கிடைப்பது பெரும் கஷ்டம். புகையிரதப்பகுதி நஷ்டத்திலேயே நடைபெறுகின்றதென்ற கெட்ட பெயரும் அதற்கு உண்டு. இப்பொழுது மொழிவிஷயத்தில் பாகுபாடு காட்டுகிறதென்ற பெயரும் சேர்ந்துள்ளது. எனவே நூற்றாண்டு விழாக் கொண்டாடும் புகையிரதப்பகுதியினர் இந்தக் கெட்டபெயர்களை நீக்கி நற்பெயர் பெறும் காரியங்களைச் செய்ய முன்வர வேண்டும். புகையிரதப்பகுதி ஒரு வர்த்தகத்துறை. மக்களுக்கிடையிலும் பாகுபாடு காட்டுவது நிச்சயம் அதன் வளர்ச்சிக்கு உதவி செய்யாது.

சிங்களம் தெரியாத தமிழ்ப் பகுதி அரசாங்க ஊழியர்களுக்கும் சிங்களத்தில் ரயில்வே 'வாரண்ட்' பத்திரங்கள் அனுப்பப்படுவதும் இதனால் அவர்கள் படும் சிரமங்களும் பலரும் பல தடவைகளிலும் ரயில்வே பகுதியினரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றனர். சிங்களத்தில் அனுப்பப்பட்ட ரயில்வே வாரண்டுகளுக்கான கட்டணச் சிட்டைகளை சில ஸ்தலஸ்தாபனங்கள் புகையிரதப் பகுதிக்கு திருப்பி அனுப்பியிருந்தன. இதுபற்றி புகையிரதப்பகுதியினர் சமீபத்தில் ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு அனுப்பிய கடிதத்தில் ரயில்வே 'வாரண்டு'கள் சிங்களத்தில்தான் அனுப்பப்பட வேண்டுமென்றும் சிங்களத்தில் அனுப்பப்படும் 'வாரண்டு'களை ஏற்றுக் கொள்ளாத ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கு ரயில்வே 'வாரண்டுகள்' வழங்கப்படுவது நிறுத்தப்படுமென்றும் அறிவித்திருக்கின்றனர். திறைசேரியினதும் உத்தியோக மொழிக் கமிஷனரினதும் யோசனையின்மீதே புகையிரதப்பகுதி இவ்வாறு தெரிவித்துள்ளதாம். புகையிரதப் பகுதி வெறும் அரசாங்க இலாகா மட்டுமல்ல. அது ஒரு வர்த்தகத்துறையென்பதை திறைசேரிக்கும் உத்தியோக மொழிக் கமிஷனருக்கும் புகையிரதப்பகுதியினர் சுட்டிக்காட்டுவது எவ்விதத்திலும் தவறாகாது.

ரயிலிலும் பஸ்ஸிலும் பிரயாணம் செய்பவர்கள் பெரும்பாலும் வசதிகுறைந்த எளிய மக்கள்தான் என்பதையும் அவர்களுக்கு பாகுபாடின்றி வசதிசெய்து கொடுக்கவேண்டியது தங்களது தலையாய கடமையென்பதையும் புகையிரதப்பகுதியினர் உணர்ந்து கொள்ளவேண்டும். ரயில் நேர அட்டவணை வெளியீட்டிலும் இதர அறிவிப்புகளிலும் தமிழ் மொழியைப் புறக்கணிப்பது தமிழ் பேசும் மக்களையும் தமிழ் பேசும் பிரயாணிகளையும் அலட்சியம் செய்வதாகும். இது ரயில்வேயின் வளர்ச்சியைப் பாதிக்கும். இதுவரை செய்த தவறுகளை நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இச்சமயத்திலாவது ரயில்வே பகுதியினர் திருத்திக்கொள்வது நல்லது. நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளிலும் தமிழ் மொழிக்கு 'நியாயமான அளவு' இடமாவது அளிக்கப்படுமென எதிர்பார்க்கலாம்.

## விசேஷ சலுகை

கொழும்பு, திங்கள்

இன்று தொடக்கம் அடுத்த வருடம் ஜூன் மாதம் 30-ந் திகதிக்கிடையில் எல்லா சாட்டட் கணக்காளரும் இன்னுமொரு அதிகமான குமாஸ்தாவை கணக்காளராக பயிற்சி கொடுப்பதற்கு எடுத்துக் கொள்ளலாம். வெளிநாட்டில் இப்படியான படிப்பிற்கு பயிற்சி பெறுவதற்கு குறைந்த சந்தர்ப்பம் இருப்பதன் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழ் விழா

சுன்னாகம், திங்கள்

மார்கழி மாதம் பத்தாம் பதினோராம், பன்னிரண்டாம் திகதிகளில் சுன்னாகத்தில் தமிழ் விழாவொன்றினை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுவருகிறது.

ஈழத்துப் பிரபல தமிழறிஞர்களும், இசை வல்லுனர்களும் இடம்வகிக்கின்ற இவ்விழாவானது முறையே குமாரசுவாமிப் புலவர் அரங்கு, வித்துவான் கணேசையர் அரங்கு, ஆறுமுகநாவலர் அரங்கு ஆகியவற்றில் முதலாம், இரண்டாம் மூன்றும் நாள் நிகழ்ச்சிகளை நடாத்துகின்றது.

## திருக்கேதீச்சரத்தில் நாவலர் குருபூசை

திருக்கேதீச்சரம், திங்கள்

திருக்கேதீச்சரத்திலுள்ள ஆறுமுகநாவலர் மடத்தில் மடாதிபதி சாவலரால் நாவலர் குருபூசை நடாத்தப்பட்டது அன்று பகல் கேதீச்சரப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம் ஆராதனைகளும், சிவானந்த குருகுல மாணவர்களது வேத பாராயணமும் திருக்கேதீச்சர கௌரியம்பாள் வித்தியாலய மாணவர்களது தேவார, திருவாசக பாராயணமும் நடைபெற்றன. நண்பகல், நாவலர் மடத்தில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பெற்றது.

"21 அம்சக்கோரிக்கையை

# தொழிலாளர்கள் போராடித்தான் பெற்றுக் கொள்ளவேண்டும்"

## புகையிரதத் தொழிலாளர் சங்க விழாவில் பொதுக் காரியதரிசி பேச்சு

யாழ்ப்பாணம், செவ்வாய்

தொழிலாளர்களது முக்கிய பிரச்னையான 21 அம்சக் கோரிக்கை இன்னும் தீர்க்கப்படாததொன்றாக விருக்கிறதென்றும் சமசமாஜக்கட்சியினர் கூட்டரசாங்கத்துடன் இணைந்த பிறகு தொழிலாளர்களுக்கு முன்னர் சொன்னவற்றை மறந்து அரசாங்கத்திடம் 21 அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பிப்பது இது சமயமல்லவென்றும் சந்தர்ப்பம் வரும்வரை பொறுத்திருப்போமென்கிறார்களென்றும் அரசாங்க ஊழியர்சங்கம் 21 அம்சக் கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறதென்றும் புகையிரதத் தொழிலாளர்களாகிய நாம் அவர்களுடன் இணைந்து 21 அம்சக் கோரிக்கைகளுக்காகப் போராடத் தயாராக இருக்க வேண்டுமென்றும் அகில இலங்கைப் புகையிரத என்ஜினியரிங் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. ஜி. ஜி. தர்மதாசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் நேற்று காலை திரு. பி. ஏ. எலாரிஸ் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கைப் புகையிரத என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தின் 8-வது வருடாந்தவிழாவில் பேசும்போதுதான் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது —

எமது சங்கத்துக்கு எதிராக மற்றைய சங்கங்கள் நடத்திய சீர்குலைவு வேலைகளும், பாதை மற்றும் இன்ஜினியரிங் பகுதித் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பும் தற்போது நமது சங்கத்துக்கு பெரும் பொறுப்பைச் சுமத்தியுள்ளது. எமது சங்கத்துக்கு எதிராக மேலதிகாரிகளுடன் கைகோர்த்துக்கொண்டு நாசவேலை செய்பவர்களை நாம் முறியடிப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். இவைகளையெல்லாம் சமாளிப்பதற்கு தொழிலாளர்களாகிய நாம் ஒற்றுமையாக ஒன்று சேர்ந்து போராடவேண்டும்.

இலங்கைத் தொழிற்சங்கச் சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. ஜே. ஏ. கே. பெரேரா பேசுகையில் கூறியதாவது:—

"தொழிலாளர்களது 21 அம்சக் கோரிக்கை விஷயத்தில் சமசமாஜக் கட்சியினர் கயிறு திரிப்பது வருந்தத்தக்கதொன்றாகும். நாம் சமசமாஜக் கட்சி மூலம் எமது 21 அம்சக் கோரிக்கையைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது வெறும் கனவு எனவே தொழிலாளர்களாகிய நாம் ஐக்கியப்பட்டுப் போராட்டம் நடத்தி அதன்மூலம்தான் நமது 21 அம்சக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்."

இலங்கைப் புகையிரதப் பகுதி அதிபர் திரு பி. டி. ரம்பாலா எமது சங்கத்தைச் சீர்குலைத்து அதன்மூலம் தொழிலாளர்களிடையே ஒற்றுமையின்மையை ஏற்படுத்த முயற்சிக்கிறார் என்றும் தொழிலாளர்கள் அதற்கு ஒருபொழுதும் இடம் கொடுக்கக்கூடாதென்றும் கூறினர்.

வடபகுதி புகையிரதப் பகுதி என்ஜினியர் திரு எஸ். இரத்தினசிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"தொழிலாளர்கள் தமக்கிடையேயுள்ள தனிப்பட்ட பிரச்னைகளை வைத்துக்கொண்டு தேவையற்ற விதத்தில் ஒற்றுமையின்மை வளர்க்கக்கூடாது ஒரு தொழிலாளி தனக்கு சம்பளம்நேரத்துக்குக் கிடைக்கவில்லையென்ற காரணத்துக்காக அப்பிரச்னையை பெரிதுபடுத்துவது சரியானதல்ல. அப்பிரச்னையைத் தனது சொந்தப் பிரச்னையாகவே கருதி, அது சம்பந்தமான மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பிரச்னையைச் சுமுகமான முறையில் தீர்த்துக்கொள்வதே சரியான முறையாகும்.

விழாவில பல கிளைச்சங்கப் பிரதிநிதிகளும், தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் உரை நிகழ்த்தினர்.

### தீர்மானங்கள்

நிதிமந்திரியிடம் சமர்ப்பிப்பதற்காக விழாவில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

புகையிரத இலாகாவின் அதிகாரிகள் மற்றும் அதிகாரிகளினால் செய்யப்படும் அநியாயமான செலவுகள் மற்றும் சீர்குலைவு வேலைகளையும்தொழிலாளர்களுக்கு நியாயமற்ற தண்டனைகள் அளிப்பதைப் பற்றியும் பரிசீலனை செய்ய நீதிமன்ற அதிகாரம் கொண்ட கமிஷன் சபையொன்றை நியமிக்க வேண்டும்.

புகையிரத சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு குறைந்தளவு போர்மன் பதவி வரை உயர்வடையக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்துமாறு கோருகிறோம்.

1948லிருந்து 1956 வரை கஷுவல் சேவையில் ஈடுபடுத்தியிருக்கும் ஊழியர்களின் அந்த சேவை காலத்தைப் பூரணமாகக் கூட்டித் தருமாறு வேண்டுகிறோம்.

## இன்று வெளிவரும் விசேஷ முத்திரை

கொழும்பு, திங்கள்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் கைத்தொழில் பொருட்காட்சியைமுன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை விசேஷ தபால் முத்திரையொன்று வெளியிடப்படும். இந்த முத்திரை நாளை முதல் சகல தபாற் கந்தோர்களிலும் விற்பனை செய்யப்படும். கைத்தொழில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நாளை கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் முதலாவது முத்திரையை வாங்குவார்.

### ஐயாறன் எழுதுவது

கள்ளத்தோணி என்ற சொல் இப்போது மெதுவாக மறைந்து, அதற்குப் பதில் 'ஐந்தேகால்' என்ற சொல் வழங்கப்படுவதாக, அட்டனிலே சில மலைநாட்டுத் தமிழ் வாலிபர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

பஸ்ஸுகளிலே மலைநாட்டுத் தமிழர் சென்றால் "ஏ கள்ளத்தோணி, போ பின்னுக்கு" என்று முன்னர் கூறுவார்களாம். இப்போது "ஏ ஐந்தேகால்" என்று அன்பாக அழைக்கிறார்களாம். ஐந்தேகால் என்றால் அர்த்தம் புரிகிறதுதானே! ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்துக்குப் பின் இந்தப் புதுப்பெயர் மலைத்தமிழருக்குக் கிடைத்துள்ளதாம்!

* *

அட்டனிலும் மஸ்கேலியாவிலும்அங்குள்ள இந்துமகாசபையினர் இம்முறை முதல் முதலாக நாவலர் பெருமானுக்கு விழா எடுத்தனர். அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினரின் ஒத்துழைப்புடன்நடந்த இவ்விழாவுக்கு வருமாறு அன்பழைப்புக் கிடைத்தது

புதிய ஒப்பந்தம்பற்றி மலைநாட்டுத் தமிழரின் கருத்து என்ன என்பதை நேரில் அறியவும் அவர்களுடன் நேரில் உறவாடவும் மிக ஆவலிருந்ததால் அந்த அழைப்பையுடன் ஏற்று சில அன்பர்களுடன் அங்கு சென்றேன். அட்டனில் பல வருடங்களாகக் கடை வைத்து வியாபாரம் செய்து வரும் ஓர் இந்திய அன்பரை இதுபற்றிக் கேட்டதும் அவர் தம் கடைக்கு தோட்டத்திலிருந்து வருபவரை இதுபற்றித் தாம் கேட்பதாவும் எல்லாரும் இந்தியா போவதற்கே விரும்புவதாகவும் சொன்னார்.

ஐந்தேகால் லட்சம்பேர் நுழைந்து போனபின் மற்றவர் நிலை மிக மோசமாகிவிடும் என்றும், ஆகவே முன் கூட்டியே எல்லா மலைநாட்டுத் தமிழரும் சென்றுவிடுவதே மேல் என்றும்விரக்தி மனப்பான்மையுடன் கூறுவதாகத் தெரிவித்தார்.

இங்கிருந்து ஒருவரும்செல்ல விரும்ப மாட்டாரென்றும் கட்டாயப்படுத்தி அவர்களை எப்படி வெளியேற்றப்போகிறார்களோ என்றும் நம்மில் பலர் அஞ்சினோமல்லவா? ஆனால் அவர்களே இங்கிருந்துசெல்ல ஆவல் கொண்டிருப்பதாகக் கேட்க மிக வியப்பாக இருந்தது. டில்லி லோக சபையிலே சர்தார் சுவர்ண்சிங் கூறியதும் இதை அறிந்துதான் போலும்.

* * *

அங்குவாலிப நவ அபிவிருத்தி சங்கமொன்று சில ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. துடி துடிப்பும் உற்சாகமும் மிக்க படித்த வாலிபர்கள் எரிமலை வெடித்தது போல் உள்ளம் கொதித்துக் கொதித்துப் பேசுகின்றார்கள், அவர்களின் தலைவரே சொன்னார் மூன்று லட்சம்பேர் இந்தியா திரும்ப மிக ஆவல் கொண்டிருப்பதாயும் கதவைத் திறந்து விட்டால் இங்கிருந்து அவர்கள் உடனடியாகச் செல்வரென்றும் கூறினர்,

வருடத்தில் சராசரி 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்கு அனுப்பப் பெறுவரென்றார் இலங்கைப் பிரதமர் இந்தக் கணக்கின்படி பார்த்தால், அந்த மூன்று லட்சம் பேரும் செல்ல ஏழு வருடங்களுக்கு மேலாகும். அதற்குள் இலங்கை அரசியலில் என்னென்ன மாறுதல்கள் ஏற்படப் போகின்றனவோ! நாடே உலகம், நாளை நடப்பதை யாரறிவார்!

* * *

ஒரு தொழிலாளியைக் கேட்டேன். என்ன நடப்பினும் சரி தாம் இலங்கையை விட்டுப் போதில்லை என்றும், இந்தியாவில் தமக்கு யாரையும் தெரியாதென்றும் சொன்னார். ஒரு சிங்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

களவரைக் கேட்டேன். ஐந்தேகால் லட்சம்பேர் செல்லுவது நல்லதென்றும் நீண்டகாலப் பிரச்னை இதனால் ஓரளவு தீருமென்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

"இந்த உழைப்பாளிகள் சென்று விட்டால் தேயிலைத் தோட்டங்கள் லாபகரமாக நடக்குமா?" என்று விசாரித்தேன். தோட்டமெல்லாம் குட்டிச் சுவராகிவிடுமென்றும், புல் மண்டி முன்போல் காடாகிவிடுமென்றும் ஒரு சிங்களத் தோட்ட முதலாளியே அஞ்சுவதாக அறிந்தேன்.

மலைநாடெங்கும் இந்த ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் பற்றித்தான் பேச்சு. எளிய தொழிலாளர் தங்கள் எதர்காலம் எப்படி இருக்குமோ என்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கையில் சில அரசியல்வாதிகள் அடுத்த தேர்தலிலே தங்கள் புதிய சான்ஸைப் பற்றி ஆவலுடன் ஆராய்ந்து வருவதை அறிந்தேன்.

* * *

பேசப்பட்டேன் நின்னடியாரில் திருநீறே
பூசப்பட்டேன் பூதலரால்
உன் அடியானென்(று)
ஏசப்பட்டேன் இனிப்படுகின்றதமையாதால்
ஆசைப்பட்டேன் ஆட்பட்டேன் உன் அடியேனே,

— மாணிக்கவாசகசுவாமிகள்.

# பாப்பரசர் நாளை பம்பாய் வருகிறார்

## பரிசுத்த தலைவரை தரிசிக்க பம்பாயில் பல லட்ச மக்கள்

### பிரதானவாயிலில் மும்முறை காட்சியளிப்பார்

பம்பாய், நவ. 30

இங்கு ஆரம்பமாகியுள்ள 38-வது மகா பிரஸாத மகாநாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த லட்சக்கணக்கான மக்கள் இம் மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர். ஏராளமான மக்கள் தொடர்ந்து இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். பம்பாயில் ஆரம்பமாகியுள்ள இந்த மகாநாட்டுக்கு பரிசுத்த பாப்பரசர் விஜயம் செய்வதையொட்டியே இங்குவரும் மக்கள் தொகை பெருமளவில் அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாநாட்டில் கலந்துகொள்ளும் மக்களின் வசதிகளுக்காக இந்திய அரசாங்கம் விசேஷ வசதிகளைச் செய்துள்ளது. ஏராளமான ஹோட்டல்களை இதற்காக ஒழுங்குசெய்திருப்பதுடன் மிதக்கும் கப்பல்களிலும் விசேஷ இருப்பிட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

உலக கிறிஸ்தவர்களின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக பரிசுத்த பாப்பாண்டவர் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி மாலை ஐந்து மணிக்கு இங்கு வந்து சேருவார். பாப்பாண்டவருடன் மேலும் பதினான்கு பேர் பம்பாய் வருவார்கள்.

உலக கிறிஸ்தவர்கள் மகாநாடு நடைபெறும் சாலத்தில் பிரதான வாயிலில் பாப்பாண்டவர் மூன்று தடவைகள் மக்கள் தரிசனத்துக்கு காட்சி தருவார். டிசம்பர் மாதம் 2, 3, 4-ம் திகதிகளில் பாப்பாண்டவர் இவ்வாறு காட்சி தருவார் என்று மகாநாட்டு நிர்வாக கமிட்டி தலைவர் அறிவித்துள்ளார். பரிசுத்த பாப்பரசர் டிசம்பர் மாதம் 5-ம் திகதி ரோமுக்குத் திரும்பிச் செல்வார்.

#### விசேஷ ரயில்சேவை

புதன்கிழமை பாப்பரசரை மக்கள் தரிசிப்பதற்காக, இன்று மாலை இந்தியாவின் பல பகுதிகளிலும் பம்பாய்க்கு விசேஷ ரயில்சேவைகள் நடைபெறுகின்றன. மதுரை, சென்னை போன்ற இடங்களிலிருந்து இன்று தனி ரயில்கள் பம்பாய் நோக்கிச் செல்கின்றன.

#### "மகத்தான வரவேற்பு அளிக்குக"

பம்பாய் வரும் பாப்பரசருக்கு மனம் கனிந்த உற்சாகமான வரவேற்பு அளிக்குமாறு அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

டில்லி பிரஜைகள் தேசிய ஒருமைப்பாட்டு கமிட்டிக்கு திரு. காமராஜர் அனுப்பியுள்ள செய்தியில் மேலும் குறிப்பிட்டதாவது:-

"மாபெரும் மதத்தின் தலைவரான பாப்பாண்டவருக்கு இந்திய மக்கள் மனப்பூர்வமான வரவேற்பு அளிக்கவேண்டும். சகிப்புத் தன்மையிலிருந்து தோன்றும் மதவெறி நமமை சில சமயம் அபாயகரமான தனிமைவழிகளுக்குக் கொண்டு செல்கிறது. இதை நாம் தவிர்க்கவேண்டும். குறுகிய நோக்கத்தை வெளிப்படுத்தும் ஆர்ப்பாட்டங்களில் நாம் இறங்குவோமானால், மகாவீரர் இராமகிருஷ்ணன், மகாத்மாகாந்தி, நேரு ஆகியோருடைய பெயரைக் கூற நாம் அருகதையற்றவர்களாகி விடுவோம்.

இந்தியாவின் சிறந்த விருந்தோம்பும் மரபுக்கேற்றபடி பாப்பாண்டவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படுமென நான் நம்புகின்றேன்."

## சுகர்னோ-சென்யி பேச்சு நீடிப்பு

ஜாகர்த்தா, நவ. 30

இந்தோனேஷியாவுக்கு திடீர் விஜயம்செய்த சீன உதவிப் பிரதமரும் வெளிநாட்டு மந்திரியுமான மார்சல் சென்-யீ நேற்று இந்தோனேஷிய அதிபர் சுகர்னோவுடன் தொடர்ந்து பேச்சுகள் நடத்தினர். இந்தப் பேச்சுக்கள் மிகவும் இரகசியமாக நடைபெற்றதாக செய்திகள் கூறுகின்றன.

இரண்டாவது ஆசிய-ஆபிரிக்கமகாநாடு குறித்து இவர்கள் முக்கிய பேச்சுக்கள் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. இந்த மகாநாடு அடுத்தமாதம் நடைபெறவிருக்கின்றது.

## ஷேக்கின் பிறந்ததினம்

ஸ்ரீநகர், நவ. 30

காஷ்மீர் சிங்கம் ஷேக் அப்துல்லா இன்று தனது 59-வது வயதை இங்கு சிறப்பாகக் கொண்டாடினார். அவரின் பிறந்ததினத்தைக் குறித்து பாகிஸ்தான் தலைவர்கள் உட்படப் பலர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

பதினொரு வருடங்களுக்குப் பின்னர் திரு. ஷேக் அப்துல்லா இம்முறைதான் வெளியில் கொண்டாடுகின்றார். கடந்த பதினொரு வருடங்களாக அவர் தமது பிறந்ததினத்தை சிறையில்தான் கழித்தார்.

## "சீனாவின் அணுகுண்டால் இந்தியா அஞ்சமாட்டாது"

### காந்திஜி உருவச்சிலை திறப்புவிழாவில் இந்தியப் பிரதமர் உறுதி

புதுடில்லி, நவ. 30

அஹிம்சை வழிகளைக்கடைப்பிடிக்கும் இந்தியா ஒருபோதும் அணுகுண்டு உற்பத்தியில் இறங்காது என்று இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

நேற்று பிரதமர் சாஸ்திரி, மகாத்மாகாந்திஜியின் உருவச்சிலையொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில்தான் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

"ரஷ்யாவும் அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் அணுஆயுதங்களை உற்பத்தி செய்து வெடித்தபொழுது சிறிதும் மனம் தளராத நாம் சீனாவின் ஒன்று அல்லது இரண்டு அணுகுண்டு வெடிப்புகளினால் மனம் தளர்ந்துவிடுவோம் என்று கூறுவது மடமையாகும்" என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

"மகாத்மா காந்திஜியின் போதனைகளை, நேருவின் தலைசிறந்த கொள்கைகளை இந்தியா பற்றி நிற்கிறது. இனியும் பற்றி நிற்கும். சீனாவின் அணுகுண்டு வெடிப்பினால் இந்திய மக்கள் மனம் தளரவில்லை. உறுதி குலையவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேநேரத்தில் இந்தியா சமாதான வழிகளை கைவிட்டு அணுஆயுத உற்பத்தியில் இறங்காது என்பதையும் தெளிவுற எடுத்துக் கூறுகின்றேன்" என்றும் பிரதமர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

இந்தியாவின் உணவு நெருக்கடி குறித்து அவர் பேசுகையில், ஆபத்தான கட்டம் நீங்கிவிட்டதென்றும் மக்களின் நேர்மையான, உண்மையான ஒத்துழைப்பின்மூலமே இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியுமென்றும் கூறினார்.

## இந்திய விஞ்ஞானி புதிய கண்டுபிடிப்பு

நியுயோர்க், நவ. 30

அமெரிக்க ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றும் ஒரு இந்திய விஞ்ஞானி உலோகத் துறையில் ஒரு முக்கிய கண்டுபிடிப்பைச் செய்துள்ளார்.

இரும்பு, பாதரசம், கோபோல்ட் ஆகியவையேஅவருடைய நுட்ப ஆராய்ச்சியாகும்.

மூன்று மாறுபட்ட உலோகங்களை ஒன்றாக இணைப்பதன் மூலமான கலவையின் முதல் மாதிரியை திரு. கண்ட் விதிகே என்ற இந்திய இளம் விஞ்ஞானி கண்டுபிடித்துள்ளார்.

## காங்கோ பற்றி சுவர்ண்சிங்

நியுயோர்க், நவ. 30

காங்கோ தகராற்றைத் தீர்த்துவைப்பதற்கு இந்தியாவிடம் குறிப்பிடக்கூடிய திட்டமெதுவும் இல்லை என்று இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார்.

நியுயோர்க் வரும் வழியில் சர்தார் சுவர்ண்சிங் நேற்று லண்டன் விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கியிருந்தார். அப்பொழுது அவர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்தான் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்திய-ரஷ்ய உறவுகள் குறித்து அவர் தெரிவிக்கையில் இருநாடுகளின் உறவுகளும் அபிவிருத்தியடைந்திருக்கின்றன என்றும் இந்தியா மீது நல்லெண்ணம் கொண்டுள்ள சோவியத் தலைவர்கள் இந்தியாவுக்குச் சகலவிதங்களிலும் உதவிகள் அளிக்கத் தயாராகவிருக்கிறார்கள் என்றும் கூறினார்.

## வேலைநிறுத்தம் 49 நாளாக நீடிப்பு

டாக்கா, நவ. 30

கிழக்குப் பாகிஸ்தான் சணல் ஆலைத் தொழிலாளர்கள் 49 வது நாளாக தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்கின்றனர்.

## நேருவின் நினைவுகுறித்து கல்கத்தாவில் கருத்தரங்கம்

கல்கத்தா, நவ. 30

நேருவின் நினைவு குறித்து கல்கத்தாவில் நேற்று கருத்தரங்கம் ஒன்று ஆரம்பமானது. இசைன திட்டக் கமிஷன் உபதலைவர் திரு. அசோக்மேத்தா ஆரம்பித்து வைத்தார்.

திரு. அசோக்மேத்தா அப்பொழுது உரை நிகழ்த்துகையில்; அரசியல், பொருளாதாரத்தை உணர்ந்து,சமூகபொருளாதாரத்துக்கு வித்திட்டார் என்றும் அவரின் சிறந்த சேவையினால்தான் நாடு இன்று முன்னேற்றப்பாதையில் செல்கிறதென்றும் கூறினார்.

இக்கருத்தரங்கம் அடுத்த மாதம் இறுதிவரை நடைபெறும். பல அரசியல் தலைவர்கள் பலவேறு அம்சங்கள் குறித்து உரை நிகழ்த்துவார்கள்.

## ஒரு வருடத்தில் 20,000 கார்கள்

### இந்தியாவில் உற்பத்தி

புதுடில்லி, நவ. 30

1964—65-ம் ஆண்டில் இந்தியாவில் 20,000 கார்கள் உற்பத்திசெய்யப்படும் என்று இந்தியத் தொழில்மந்திரி திரு. பி. மிசரா தெரிவித்துள்ளார்.

1963—64-ம் ஆண்டில் இந்தியாவில் 18,077 கார்கள் உற்பத்தி செய்யப்பட்டதென்றும் அடுத்த வருடத்தில் இவற்றை உற்பத்திசெய்ய 431 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## செல்வி ஜின்னாவுக்கு எதிராக சதி முயற்சி?

### அபேட்சகர் பட்டியலிலிருந்து அவரை நீக்க திட்டமாம்

கராச்சி, நவ. 30

பாகிஸ்தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் செல்வி பாத்திமா ஜின்னாவை அபேட்சகர் பட்டியலில் இருந்து நீக்கிவிட அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் இந்தச் செய்தியை, பாகிஸ்தான் சட்டத்துறை அமைச்சர் அகமட் குர்ஷித் மறுத்துள்ளார்.

கட்டாயமாக, அபேட்சகர்களை வடிகட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால், அப்பொழுது அரசாங்கத்தைக் குறைகூறிப் பயனில்லை என்று அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அதிபர் தேர்தல் விரைவாக நடைபெறவேண்டுமென்று பாகிஸ்தான் அரசாங்கம் விரும்புவதாகவும் அபேட்சை என்ற போர்வையில், எதிர்க்கட்சிகள் அதிகமான மாற்றுஅபேட்சகர்களை நிறுத்தினால், அபேட்சகர்களை வடிகட்டுவது தவிர்க்கப்பட முடியாததாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சீனா மன்னிப்பு கேட்டது!

ஜோகர்னர்ஸ்பேக், நவ.30

தென் ஆபிரிக்காவிடமிருந்து சோளம் வாங்கியதற்காக சீன பொதுவுடைமைக்கட்சி, தென் ஆபிரிக்க பொதுவுடைமைக் கட்சியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

இரகசியப் பொலிஸ் அதிகாரி சொரல்ட்ஜூடி இத் தகவலை இங்கு ஒரு வழக்கு விசாரணையில் வெளியிட்டார்.

## கூட்டு முன்னணி

பண்டாரவளை, திங்கள்

ஜாதிக விமுக்தி பெரமுனையும், மகாஜன எக்சத் பெரமுனையும் ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்குவதற்கான திட்டங்களை நேற்று முன்தினம் ஆராய்ந்திருப்பதாகத் தெரியவருகின்றது. கோவில்களிலும், வேலைத்தலங்களிலும், கடைகளிலும் டிசம்பர் மாதம் 9-ந் திகதி பத்திரிகைமசோதாவிற்கு அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிப்பது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

## சந்தேகநபர்கள் விடுதலை

மாவிட்டபுரம், திங்கள்

சென்றமாதம் 19-ம்திகதி பண்டத்தரிப்பு சித்தங்கேணி றோட்டில் பாடசாலைக்குச் சென்ற கோமதி சரவணமுத்து என்னும் வடலியடைப்பைச் சேர்ந்த மாணவி காரினால் மோதுண்டு மரணமானது சம்பந்தமான மேல் விசாரணை மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபாலு முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

டாக்டர் தியாகராசா,வயிரவிமுத்தையா, நாகலிங்கம் பசுபதி, பாடசாலை மாணவிகளான மனோன்மணி மாணிக்கம், புஷ்பராணி செல்லத்துரை ஆகியோர் சாட்சியமளித்தபின் சம்பவசமயம் காரில் இருந்ததாகக் கூறப்படும் அளிபுரத்தைச் சேர்ந்தவர்களான சின்னத்தம்பி கந்தசாமி, பொன்னையா கந்தையா ஆகிய இரு சந்தேகநபர்களையும் நீதிபதி விடுதலைசெய்தார்.

சந்தேகநபர்கள் சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## திரைப்படத்தில் கவிஞர் யோகி?

சென்னை, நவ. 30

கவிஞர் யோகி சுத்தானந்தபாரதியார் சினிமாப் படத்தில் நடிக்கப்போவதாகத் தெரியவருகின்றது. அவரினால் ஸ்தாபிக்கப்பட்ட கலை மன்றத்தின் சார்பில் தமிழகத்தின் பண்டைய தமிழ்ப் பெரியார்களின் வரலாறுகளைத் திரைப்படமாகத் தயாரிக்கப்போகிறார். முதலில் 'மாணிக்கவாசகர்' கதையை யோகியே தயாரித்து அவரே நடிப்பாரென்றும் தெரிகிறது.

## உணவு நெருக்கடி தணிகிறது

புதுடில்லி, நவ. 30

அடுத்தவருடம் ஆவணிக்குள் நாட்டின் உணவு நிலைமை திருந்திவிடுமென்று உணவு மந்திரி அறிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து இந்தியா வரும் அரிசி,கோதுமையில், 14,000 தொன் அரிசியும், 14,000 தொன் கோதுமைமாவும் டிசம்பர் மாதம் பிற்பகுதியில் கேரளத்துக்கு அனுப்பப்படும்.



# மாணவர் மலர்



# மறைந்தும் மறையாத தலைவர்

— மகான் —

**ஆ**ண்டு: 1963. மாதம்: நவம்பர். திகதி: 22. நாள்: வெள்ளிக்கிழமை. நேரம்: பகல் பதினொன்று! உலகம் வழக்கம்போல் "உறங்கி"க் கொண்டிருந்தது. அரசியல் தலைவர்கள் தங்களது வெட்டிப் பேச்சுக்களை வழமைபோல நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். இதைவிட வேறு பல இயற்கைச் சம்பவங்களும் அசாதாரண நிகழ்ச்சிகளும் உலகில் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அதேவருடம். அதே மாதம். அதே நாள். ஆனால் நேரத்தில் மட்டும் சிறு வித்தியாசம். அப்பொழுதும் எதுவும் நடந்துவிடவில்லை. பத்திரிகைகளும் செய்திகளை திரித்தும், உண்மையுடனும் வெளியிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் முக்கியமான பத்திரிகைகளின் ஆசிரியர்கள்...ஏதும் பரபரப்பான செய்திகள் கிடையாதா என்று "ஏங்கி"க் கொண்டிருந்த சமயம்...உலக மக்களை விலும் கருதியிருக்க முடியாத ஒரு பயங்கர நிகழ்ச்சி... சோக சம்பவம் ஒன்று நடைபெற்றுவிட்டது.

உலகில்...உலக மக்களின் மீது ஒரு இடி விழுந்தது! அப்பொழுது—

ஏற்கனவே சில பக்கங்களை பிரசுரித்த பத்திரிகைகள் கிழித்தெறியப்பட்டன. டைம்ஸ் போன்ற பிரபல வெளிநாட்டுப் பத்திரிகைகளின் அநேக பக்கங்கள், இலட்சக்கணக்கான இதழ்கள் குப்பைத் தொட்டியை நாடின. ஏன் நமது உள்நாட்டுப் பத்திரிகைகள் கூட முதல்பக்கத்தையும் உள்பக்கமொன்றையும் உடனடியாக மாற்றிக்கொண்டுவிட்டன. அப்படி என்னதான் நடந்தது?

சமாதானத்துக்காக பாடுபட்ட ஒரு இலட்சியவாதி... அமெரிக்காவின் 35-வது ஜனாதிபதி ஜோன். எப். கென்னடி ஒரு கொலைகாரனின் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகிவிட்டார். ஜனாதிபதி கென்னடி கொலைசெய்யப்பட்ட செய்தி, காட்டுத்தீயை விட வேகமாகப் பரவியது. சமாதானத்தை விரும்பிய கோடான கோடி மக்கள் அழுது புலம்பினர். ஏன்... உலகமே கண்ணீர்விட்டது. ஒருவனின் கோர செயலினால் உலகம் இன்று ஒரு தலைவரை இழந்து தவிக்கிறது. அவர் எம்மைவிட்டுப் பிரிந்து இன்றுடன் ஒருவருடமும் ஒன்பது நாட்களுமாகின்றன. மாண்டவர் மீளமாட்டார். ஆனால்மக்க



ளின் இதயத்தில் குடியமர்ந்த அந்த தலைவர் என்றும் எமது இதயத்தில் நிறைந்தே இருப்பார். அவர் சமாதி அடைந்த அந்த ஆலிங்டன் கல்லறையில் இருக்கும் அணையா ஒளி விளக்கும் என்றும் எரிந்து கொண்டே இருக்கும்.

சமாதானத்துக்காகவும், அடிமை விலங்கினை அறுக்கவும் பாடுபட்ட இரு தலைவர்கள் "(லிங்கன், கென்னடி) இங்கே ஒற்றுமைபடுத்தப்பட்டிருக்கும் அதிசயத்தைப் பாருங்கள்.

ஆபிரகாம் லிங்கன் 1860-ல் அமெரிக்க ஜனாதிபதியானார். கென்னடி 1960-ல் ஜனாதிபதியானார். இருவரும் வெள்ளிக்கிழமை தினத்தில் கொலை செய்யப்பட்டனர். இருவரும் கொலைசெய்யப்படுகையில் அவர்களின் மனைவிமாரும் பக்கத்தில் இருந்தனர். இருவரும் பின்பக்கத்திலிருந்து தலையில் சுடப்பட்டனர். இவ்விருவருக்கும் அடுத்ததாகப் பதவிக்கு வந்தவர்களின் பெயர்கள்: ஜோன்ஸன். இருவரும் தென்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். லிங்கனுக்குப் பிறகு பதவிக்கு வந்த ஆண்ட்ரூ ஜோன்ஸன் 1808-ல் பிறந்தார். கென்னடிக்கு அடுத்தாகப் பதவிக்கு வந்த லிண்டன் ஜோன்ஸன் 1908-ல் பிறந்தார்.

லிங்கனைச் சுட்டுக் கொலை செய்த பூத்தும் கென்னடியைச் சுட்டுக்கொலை செய்த ஒஸ்வோல்டும் தென்மாகாணத்தைச் சேர்ந்தவர்களே. இருவரும் விசாரணைக்கு முன்னதாகவே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

லிங்கன் பதவியிலிருக்கையில் அவரது மனைவி ஒரு குழந்தையை இழந்தார். அதே போல, கென்னடியின் குழந்தையொன்றும் இறந்தது. லிங்கனின் காரியதரிசி பெயர் கென்னடி. கென்னடியின் காரியதரிசி பெயர் லிங்கன். சம்பவ தினத்தன்று இரு காரியதரிசிகளும் தங்களது தலைவர்களை வெளியில் செல்லக்கூடாது என்று எச்சரித்திருக்கிறார்கள்.

இவ்வளவு "ஒற்றுமை"யில் ஒரு வித்தியாசம். லிங்கனை ஒரு தியேட்டரில் சுட்டுவிட்டு பூத் கிடங்குக்கு ஓடினான். ஆனால் கென்னடியை ஒஸ்வோல்ட் ஒரு கிடங்கிலிருந்து சுட்டுவிட்டு தியேட்டருக்கு ஓடினான். மறைந்த இரு தலைவர்களும் நீக்ரோக்களின் சம உரிமைக்காகப் பாடுபட்டவர்கள் என்பதையும் உங்களுக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா?

## புத்தி வந்தது

-மாஸ்டர் சிவலிங்கம்-

"சரி, சரி... பையனை எனக்குப் பிடித்துவிட்டது. உனக்கு கொமிஷன் எவ்வளவு...?" என்று கேட்டுக்கொண்டே மணிப் பர்ஸை வெளியிலெடுத்தார் அந்தச் செல்வந்தர். "என்ன சார்...! என்விடத்திலேயே கேட்கிறீங்களே... வேலைக்கு ஒரு நல்ல பையன் வேண்டுமென்று நீங்கள் சொன்ன நாளிலிருந்து அதே வேலையாகத் தேடிக் கண்டு பிடித்திருக்கிறேன்..." என்று நாசுக்காகத் தனது தீரத்தைக் கூறிவிட்டு, "சார் போன வாரம் டாக்டர் ஹென்றிக்கு ஒரு பையன் பிடித்துக் கொடுத்தேன். அவர் எனக்கு முப்பத்தைந்து ரூபா கொடுத்தார். அப்புகாமி மாத்தயாவுக்கு ஒரு பையன் பிடித்துக் கொடுத்ததற்கு அவர் எனக்கு நாற்பது ரூபா தந்தார்" என்று முரடன் பேச்சை முடிப்பதற்குள் "சரி, சரி... இதோ முதலில் இதை வைத்துக்கொள்... பிறகு பார்க்கலாம்" என்று கூறி நாலு பத்து ரூபா நோட்டுகளை அவனுடைய கையிலே திணித்துவிட்டு, "ஒன்பது மணிக்கெல்லாம் பையனுடன் வந்துவிடு..." என்று கூறிவிட்டு நடையைக்கட்டினார் அந்தச் செல்வந்தர்.

முரடனின் முகத்தில் வெற்றிக்களை தாண்டவமாடியது.

ஒன்பது மணிக்கெல்லாம் கோபாலை அழைத்துக் கொண்டு செல்வந்தர் வீட்டை அடைந்து, அவரிடம் கோபாலை ஒப்படைத்துவிட்டு உடனடியாக வெளியேறிவிட்டான் அந்த முரட்டு மனிதன். செல்வந்தர் நடந்துகொண்டவிதத்திலிருந்து அவர் ஒரு முன் கோபக்காரர் மட்டுமல்ல; ஒரு குடிகாரருங்கூட என்பதை கோபால் ஒருவாறு புரிந்து கொண்டான்.

"டேய்" பையா! என்று இரைந்து கத்தினர் அந்தச் செல்வந்தர். கோபால் நடுங்கியபடி மெள்ள அவர் அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றான். 'டேய்! நீ என்ன வேலைகள் செய்யவேண்டும் தெரியுமா? அதிகாலை ஐந்து மணிக்கு எழுந்து கோப்பி போட வேண்டும், கோப்பை, சட்டி பானை ஆகியவற்றைப் பூசிக் கழுவவேண்டும்; வீடுவாசலெல்லாம் கூட்டவேண்டும்; சமையலுக்கு ஒத்தாசைசெய்ய வேண்டும், பின்னேரம் பூமரங்களுக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும்....வீட்டு எஜமான் மூச்சு விடாமல் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டே போனார். கோபால் ஊரைவிட்டுப் போனால் உல்லாசமாக வாழலாம் என்று எண்ணிய தனது முட்டாள் உள்ளத்தை நொந்துகொண்டு சிலையாக இருந்தான். "நான் சொன்ன வேலைகளையெல்லாம் நன்றாகச் செய்வாயா" என்றார் எஜமான், 'எனக்குச் சட்டி, பானை பூசிப் பழக்கமில்லை—" என்றான் கோபால். அடுத்தவிநாடிம்... 'பளார்! பளார்' என்று முகத்தில் அறைந்தார் முரட்டு எஜமான். கோபால் அலறியபடி தரையில் சாய்ந்தான்.

(தொடரும்)

## தமிழ்ப் புலவர்கள்

-ச. சிவராசசிங்கம்-

சோழ நாட்டிலே நாகபட்டினம் நகரிலே சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே அருட்கவி அழகமுத்துப் புலவர் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் அம்பலவாணச்செட்டியார். தாயார்பெயர் சிவகாமசுந்தரி அம்மையார். கல்வி அறிவு அற்ற இவர் ஆறுமுகன் திருவருளால் கவி பாடும் வல்லமைபெற்றார். திருமுருகன் அருளால் இவர் பாடிய முதல் பாடல் இதோ:

"பொன்பூத்த நூ புரப்பாதமும் புரிபூத்தமாபீராறுதோள்
முன்பூத்த கண் முன்னொன்குடன் முடியாறுவை வடிவேலுமாய்
கொன்பூக்க என்னிதயத்திலே குடிகொண்டருள் கூர்வாய்குற
மின்பூத்தபா காசன்முகா வேலாயுதா வேலாயுதா"

இவர் முருகக்கடவுள் மீது திறப்புகழ், மெய்கண்ட வேலாயுத உலா என்னும் நூல்களையும், நாகையில் எழுந்தருளிய காயாரோகணக் கடவுள் மீது காயரோகணக் குறவஞ்சி என்னும் நூலையும் பாடினார்.

செந்தூர்வாழ் சிந்தைக்குமரன் ஆறுமுகன் மீது எல்லையில்லா ஈடுபாடுகொண்ட அழகமுத்துப் புலவர், தமிழ் வளர்க்கும் பணியிலும் அதிகம் ஈடுபட்டு தமிழினை வளர்க்கத் தொண்டு புரிந்தார்.

## நல்லூரில் நகைச்சுவை விழா

நல்லூர், திங்கள்

யாழ். இளம் நடிகர் சங்கத்தின் ஆதரவில் நகைச்சுவை விழாவொன்று சனிக்கிழமை மாலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை அரங்கில் நடைபெறவிருக்கிறது.

இவ்விழாவில் நல்லூர் தேவஸ்தான பிரசாரகர் திருவி எஸ். எஸ். மணிபாகவதரின் பிரதம சீடன் ஸ்ரீலஸ்ரீ ஞானசுந்தரத்தின் முழு நீள நகைச்சுவை வில்லுப் பாட்டுக் கச்சேரியும் நகைச்சுவை நாடகங்கள், நகைச்சுவை விருந்து, ஆங்கிலம் கலந்த நகைச்சுவை கதாப்பிரசங்கம், நவீன வயலின் இசை, நாதஸ்வரக்கச்சேரி, நகைச்சுவைக் கச்சேரி ஆகியன விசேஷ நிகழ்ச்சிகளாக இடம்பெறுமாம்.

# பரீட்சைக்கு பயம்வேண்டாம்!

— த. இந்திரலிங்கம் —

**இ**ந்தக் காலங்களில் இரவு நேரத்தில் யாராவது ஒரு மாணவன் உறங்கும் இடத்திற்குச் சமீபத்தில் போவீர்களேயானால், அம்மாணவன் பின்வரும் வார்த்தைகளை உளறியடித்துக் கொண்டிருப்பதைக் கேட்பீர்கள்:-

'பயோலஜி...கெமிஸ்ட்ரி...பிசிக்ஸ் ...சைபர் ...சைபர் ...பூஜ்யம்!" என்றுதான் உளறியடித்துக் கொண்டிருப்பான். கனவிலே, பரீட்சை பயமுறுத்துவதே இதற்குக் காரணம். மாணவனை எழுப்பி, "ஏண்டாப்பா அலறுகிறாய்!" என்று கேட்டால் "நாளை டெஸ்ட்" என்று பதில் வரும். அத்தனை பயப்படுகிறார்கள் பரீட்சைக்கு.

படிக்காமல் இருந்துவிட்டுப் பரீட்சைக்குப் பயப்படுவதில் என்ன பிரயோசனம்? படிக்காதவர் கேள்வி கேட்கப் போகிறார்கள்? படிக்கச் சோம்பல்! பரீட்சைக்குப் பயம். ஒரு நோயாளி கூறினாராம்:-

"சாப்பிட்டால் நோய் அதிகரித்து விடும் என்று பயமாக இருக்கிறது! சாப்பிடாவிட்டால் பசி வயிற்றைக் கிள்ளுகிறது." என்று அதுபோலல்லவா இருக்கிறது விஷயம்!

பரீட்சைக்கு முதல் இரவு இரவுப் படக்காட்சிக்குப் போய்விட்டு எக்கவித அக்கறையுமின்றிப் பரீட்சை மண்டபத்திலே உல்லாச உறக்கஞ் செய்யும் அசகாய சூரர்களும் இருக்கிறார்கள்! அவர்களைப் பரீட்சை மட்டுமல்ல பகாசுரனே பயமுறுத்த முடியாது. பரீட்சை வந்தால் என்ன? "பெயில்" ஆனால் என்ன என்று சர்வ சகஜமாக வேதாந்தம் பேசுபவர்கள் அவர்கள்!

முயன்று படிப்பவர்களில் பலர் "மூளைக்குள் ஏற மறுக்கிறதே" என்று பகீரதப் பிரயத்தனம் செய்கிறார்கள்! ஊக்கம் இருக்கிறது! ஆனால் திறமை இல்லை! மூளைக்குள் தள்ளுகிறார்கள், ஆனால் அது உள்ளே நுழைவதில்லை! ஊக்கத்தைக் கொடுத்த இறைவன் திறமையைக் கொடுக்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். நீங்கள் படித்தவற்றில் மூன்றில் இருபங்கிலாவது கேள்விகள் வந்து காணிருக்கும்! இதற்காகச் சிலர் இன்னுமொரு வேலை செய்வதுண்டு! புத்தகத்தை மூடிக்கொண்டு கடவுளைத் தியானித்தவண்ணம் ஏதோ ஒரு பக்கத்தைத் திறப்பார்கள். பின்பு அதனை மூச்சு விடாமற் படிப்பார்கள். சில சமயம் பரீட்சையில் அங்கு படித்ததைவிட மற்றவை எல்லாம் வந்திருக்கும்! அசடு வழிய வெற்றுத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியேவருகிறார்கள். ஆதலினால் இந்த ஜோதிடம் எவையும் நமக்கு வேண்டாம். நாம் படித்தவற்றை மீண்டும் படிப்போம். சிலர் வகுப்பிலே தூங்கிவிட்டு நாம் எதுவும் படிக்கவில்லையே என்று கூறுவார்கள்! அதனால் ஆசிரியர்கள் படிப்பித்ததை மீண்டும் திருப்பிப் படிப்போம், அது போதும்! அதை விட்டுவிட்டு கனவிலும் நனவிலும் பயப்படுவது வீண் செயல்.

## தபால் தந்தி ஊழியர் 15-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர் வடகிளையின் 15-வது ஆண்டு விழா வருகிற ஞாயிற்றுக்கிழமைகாலை யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

தபால் தந்தி ஊழியர் சங்க வடகிளைத் தலைவர் திரு. நா. தனையசிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் தாய்ச் சங்கப் பிரதிநிதிகள், கிளைச் சங்கப்பிரதிநிதிகள், மற்றைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்களென்று அறிவிக்கப்படுகிறது.

ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்




ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும். அதி உன்னத மூலப் பொருட்களினால் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ர அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**செவ்வாய் 1-12-64**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பாட்டு, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீ லங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 விவேகச் சக்கரம், 7-30 இசை நாடகம் "சொக்கன்" எழுதியது, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 நாதஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 பாட்டு—சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம், 7-45 ரேடியோ செய்திமலர்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 திரைப்பட இசை, 1-30 வாத்திய இசை 1-50 குரல் இசை, 2-10 உயர் தரப் பள்ளிகளுக்கு, 3-40 பொன்னெளிர் பாரதம்—தொடர் நிகழ்ச்சி.

மாலை 5-15 வாத்தியக் கோஷ்டி இசை, 5-45 இசைப் பயிற்சி.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள். 6-15 செய்திக் குறிப்புகள், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 நாடகம்—மூன்று முடிச்சு 7-45 பாட்டு-மதுரை என். சோமசுந்தரம், 9-15 நாட்டுப் பாடல்கள் 9-30 முன்னேற்றப்பாதை-சித்திரம், 9-45 இலக்கிய ஏடு சஞ்சிகை நிகழ்ச்சி.


**ஸ்ரீ மனோகரா**
(யாழ்ப்பாணம்) போன் 4 6 9
தினசரி 6-30க்கும் 9-30க்கும்
என். டி. ராமராவ்-அஞ்சலிதேவி
நடித்த
**சதி அனுசூயா**

**REGAL — JAFFNA**
NOW SHOWING
Sights Never Seen Before!
MONDO INFAME
Color - Adults Only


## சமயப் போட்டி முடிவுகள்

நல்லூர், திங்.

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை, மாணவர்களுக்கிடையே சமய பேச்சுப் போட்டியை நடத்தியது. இப்போட்டிக்கு திரு க. சிவவாகீசர், திருமதி சிவானந்தவல்லி கனகநாயகம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். இப்போட்டியில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

**மூன்றாம் வகுப்பு**

ம. ஞானரதி. சி. சிவசோதி, க. கனகதயாபரி, நா. சிவகுகன், க. லோகேஸ்வரி, சோ, கார்த்திகைகுமாரன்.

**நான்காம் வகுப்பு**

க. கனகதயாவதி, சொ. கணேஸ்வரன், சொ. யோகேஸ்வரி, அ. யோகேஸ்வரி, சி. தர்மராசு, க. செல்வவடிவாம்பிகைராணி.

**ஐந்தாம் வகுப்பு**

சி. சிவமணி, சொ: யோகேஸ்வரன், தி. தங்கராணி, ம ஞானரூபி.

**ஆறாம் வகுப்பு**

மு. கீதாஞ்சலி, செ. கமலாம்பிகை, வா. கதிர்காமநாதன், க. கனகதயானன், ம. ஞானகாந்தி.

**ஏழாம் வகுப்பு**

நா. சிவகுமாரன். க. தயானகேசரி, தி சீவரத்தினம், அ ஸ்ரீஸ்கந்தராசா, செ. ரவீந்திரன்.

**எட்டாம் வகுப்பு**

செ. நீலாம்பிகை.

**ஒன்பதாம் வகுப்பு**

தி. நவரத்தினம்.

## பஸ் வருவிப்பது குறித்து பேச்சு

கொழும்பு, திங்கள்

இன்று நடைபெருவிருக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் விசேஷ கூட்டத்தில் மேற்கு ஜெர்மனியிலிருந்து குறிக்கப்பட்ட காலகதிற்குள் இலங்கைக்கு அனுப்பமுடியாத மேசிடஸ் பென்ஸ் பஸ்கள் பற்றி நிலைமை ஆராயப்படும் எனத் தெரிகிறது. இவ்விதமாக மேற்கு ஜெர்மனியிலிருந்து பஸ்கள் வராததற்கு இரண்டு காரணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஒன்று பஸ் தயாரிப்பாளர்கள் குறித்த காலத்தில் பஸ்களை தயாரிக்க முடியவில்லை. மற்றது, கூடுதலான கட்டணம் செலுத்தும்படி கூறியதாகும். இக் கூடுதலான கட்டணம் செலுத்தப்பட்டால் ஒரு பஸ் வண்டியின் விலை முன்னர் குறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க அதிகரித்திருக்குமாம்.

## இளைஞர் கழக பரிசளிப்பு விழா

இணுவில், திங்கள்

"சிறு கைத்தொழில்களின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தின் ஒரு பகுதியை எம்மால் வளர்ச்சிசெய்யமுடியும். வீண் விரயமாகும் சில பொருட்களை கொண்டு நாம் விரயமாக்கும் சில மணி நேரங்களில் சிறந்த பன்னவேலைப் பொருட்களை உருவாக்குவதால் நாமும் பயனடைகின்றோம், நாடும் பயனடைகின்றது" என்று உடுவில் கிராம சபைத் தலைவர் திரு ச. முத்துலிங்கம் இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இணுவில் ஜோதி இளைஞர் விவசாயக்கழகத்தின் பரிசளிப்பு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

கழகத்தின் பன்னவேலை போதனாசிரியர் திரு சி. குணநாயகம் பேசுகையில், "உத்தியோகத்திலுள்ளவர் பெறும் சம்பளத் தொகையைப் போன்று பன்னவேலையில் ஈடுபடும் சிறுவர் சிறுமியர் கூட உழைத்துக்கொள்ள முடியும்" என்றார்.

வலி. வடக்கு விவசாயக் கழகத் தலைவர் திரு. பெ.கனகசபாபதி பேசுகையில், ஒற்றுமையைக் கட்டிக்காக்க முடியாதவர்கள் ஒழுங்குமுறையான வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது என்றார்.

திரு. இ. பொன்னம்பலம், சி. சண்முலிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்புவிழாவில் பன்னவேலையில் பரிசு பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## தேவரையாளி பெற்றோர் சங்கம்

பருத்தித்துறை, திங்கள்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிப் பெற்றோர் - ஆசிரியர் சங்க வருடாந்த கூட்டம் சங்கத் தலைவர் திரு. எம். எஸ். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றது.

வடமராட்சிப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி திரு. எ. வி ஜீவநாயகம், திரு எஸ். கணபதிப்பிள்ளை, ஆசிரியர்கள் டி. ரி. சாமுவேல், ரி. வீரசிங்கம், ஏ. எம். செல்லத்துரை ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

கல்லூரி அதிபர் திரு. சீனிதம்பி பேசுகையில் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் பெற்றோரையும், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களையும் நன்கு மதித்து அவர்கள் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கின்றது என்றும் ஆனால் அந்த அளவுக்கு பெற்றோர் பாடசாலை விஷயங்களில் ஆர்வம் காட்டாதிருப்பது கவலைக்குரியதென்றும் கூறினார். இன்றைய நிலையில் பெண்பிள்ளைகள் குறைந்தது சிரேஷ்ட வகுப்பு வரையாவது கட்டாயம் கற்கவேண்டுமெனவும், பின் தங்கிய சமூக முன்னேற்றத்துக்கு இது அவசியமெனவும் அதிபர் வற்புறுத்தினார்.

கூட்ட முடிவில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், செயலாளர் திரு சி மாசிலாமணி நன்றியுரை கூறினார்.

## ஆண்டு விழா

துனுக்காய், திங்கள்

வன்னேரிக்குளம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் துனுக்காய் பிரிவுக் காரியாதிகாரி திரு. க. ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ். கங்கசாமி, வன்னேரிக்குளம் கிராமசேவையாளர் திரு. பரமநாதன் ஆகியோர் உரைநிகழ்த்தினர். புதுவருட உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற்றது.

# காற்று வாங்க சென்ற மாணவரிடம் கைவரிசை

## அப்பீல் விசாரணையில் தண்டனை இரட்டிப்பு

கொழும்பு, திங்கள்

கடற்கரைக்கு காற்று வாங்கச் சென்ற இரு மாணவர்களிடம், கைவரிசை காட்டிய இரு நபர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை அவர்களின் அப்பீல் விசாரணையில் இரட்டிப்பாக்கப்பட்டிருக்கின்றது.

சென்ற ஆண்டு பெப்ரவரி மாதம் தெகிவளையில் வசிக்கும் திரு. பெனுட் சில்வா (23) என்ற மாணவன் தனது சிநேகிதி ஒருவருடன் கல்கிசை கடற்கரைக்கு சென்றிருந்த பொழுது லயனல் சில்வா பெனடிக்ட் பெரேரா ஆகிய இருவரும் சில்வாவிற்கு அண்மையில் சென்று அவர்கள் எங்கே வசிக்கிறார்கள் என்று கேட்ட பிற்பாடு, அவரைத் தாக்கி, பின்னர் அவருடைய கைக்கடிகாரத்தைப் பறித்துக் கொண்டு அவ்விடத்தில் நின்றும் ஓடினர் என்றும் மற்ற எதிரி சில்வாவை அவ்விடத்தில் நின்றும் ஓடிவிடும்படியும் அல்லாவிட்டால் தான் அவர்களை அடித்துப் போடுவதாகவும் பயமுறுத்தினர் என்றும் குற்றம் சாட்டப்பட்டு ஒரு வழக்கு பதியப்பட்டிருந்தது.

திரு. சில்வா இச்சம்பவத்தை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததின்பேரில் பொலிஸார் இரண்டு நபர்களையும் கைது செய்து கைக்கடிகாரத்தையும் கைப்பற்றியிருந்தனர்.

இந்த வழக்கு கொழும்பு தெற்கு நீதிபதிமுன் எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது நீதிபதி எதிரிகளைக் குற்றவாளிகளெனக் கண்டு ஒவ்வொருவருக்கும் ஒரு மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார், இத்தீர்ப்பை எதிர்த்து எதிரிகள் மனுச் செய்தனர்.

மனுவழக்கு நீதியரசர் சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது மனுவைத் தள்ளுபடி செய்து பின்வருமாறு குறிப்பிட்டார். "இந்த வழக்கில் நான் எதிரிகளின் தண்டனையை 6 மாத கடூழியச் சிறைத் தண்டனையாக இரட்டிக்கின்றேன். இதை நான் ஏன் செய்கிறேன் என்றால் இதுபோன்ற சம்பவங்கள் காலிபேஸ் கடற்கரையிலும் கல்கிசை கடற்கரையிலும் சாதாரணமாக அடிக்கடி நடைபெறுகின்றன. அத்துடன் மரியாதையுடன் நடந்துகொள்ளும் பிரஜைகள் அங்கு காற்று பெறுவதற்காக செல்லும் பொழுது அவர்கள் கொள்ளைக் கூட்டத்தினரால் தாக்கப்பட்டு பொருள்கள் பறிக்கப்படுகின்றனர்.

## பௌத்த அரசாங்க அதிபா வேண்டுமாம்

**ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திருமலைக்கிளை கோரிக்கை**

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலையிலுள்ள இரண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிளைகளில் ஒரு விஷயம் குறித்து கருத்துவேறுபாடு ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபயபுர கிளைக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபொழுது திருமலை அரசாங்க அதிபரை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்துவிட்டு ஒரு பௌத்த அதிகாரியை இங்கு நியமிக்கவேண்டும் என்று பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் திருமலை கிளை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தில் தற்போதைய அரசாங்க அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாமென்றும் இப்போதுள்ள திருகோணமலை அரசாங்க அதிபர் நேர்மை மிக்கவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேவை

பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புடவை விற்பனையாளர் ஒருவர் தேவை. 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 2 மைல் தூரத்துக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். காசுப் பிணை ரூபா 500-00 உடனே கட்டவேண்டும் சம்பளம் மாதம் ரூபா 65-00; நிரந்தரமானபின் சம்பளம் ரூபா 75-00 ஆகும். விண்ணப்பங்கள் 15-12-64 க்கு முன் "கௌரவ காரியதரிசி, பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்துக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கௌரவ காரியதரிசி
பருத்தித்துறைப் பலநோக்குக்
கூட்டுறவுச் சங்கம்.

27-11-64 1206

### வரி விளம்பரம்

**வைத்தியம்**

வாதரோகம், மூலவியாதி, நீரிழிவு, பாண்டு மற்றும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை பெறலாம், வைத்தியர், பரமானந்தம், 16, அரச வீதி, நல்லூர். 1168

**விற்பனைக்கு**

22 சிறீ 810 பேர்குசன் 4 சிலின்டர் டீசல்மெசின். டில்லர் பெட்டியுடன் 4500 மேல் விலை கோரவும். D. 8. G. யோண் கிளிநொச்சி 1164

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற பேர்கள் அடங்கிய கடிதங்களைக் காணலாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 1250 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 1050 வைத்தியர் பரிபூரணானந்த கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## சென் தோமஸ் வெற்றி

மாதகல், திங்கள்

மாதகல் சென் தோமஸ் கோஷ்டிக்கும் இளவாலை சென் ஜேம்ஸ் கோஷ்டிக்குமிடையே மாதகல் மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென் தோமஸ் கோஷ்டியினர் 1—0 கோலால் வெற்றி பெற்றனர்.

வெற்றிபெற்ற கோஷ்டியின் சார்பில் விளையாடிய திரு. எஸ். பூராசா, டெ.வி.ஆ.குமார், ச. சேனாதிராசா ஆகியோர் திறமையாக விளையாடினர். இப்போட்டிக்கு திரு. ஏ. ஜோசப் மத்தியஸ்தம் வகித்தார்.

## அரிசி இல்லாததற்குக் காரணம்

டெனுவரா, திங்கள்

டெனுவரா பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தினர் இந்தமாதம் 26 ந் திகதி சில்லறை வியாபாரங்களுக்கு அரிசி விநியோகம் செய்யமுடியாமல் இருந்ததற்கு தாங்கள் கேட்டபடி 17 வண்டிகளுக்குப் பதிலாக இரண்டு வண்டி அரிசியை உணவுக் கட்டுப்பாட்டு இலாகா அனுப்பியிருந்ததே முக்கிய காரணம் என்று உணவு மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு மேலும் தங்களைக் கஷ்டங்களுக்குள்ளாக்காது கோத்திற்கு அரிசியை அனுப்பி வைக்குமாறு மந்திரியை சமாஜத்தினர் அக்கடிதத்தில் மேலும் கேட்டுக்கொண்டனர்.


**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

பிரபல பின்னணி பாடகர்
**டி. எம். சௌந்தரராஜன்**
**ஜெமினி சந்திரா**
மற்றும் பலர் நடித்த

**பட்டினத்தார்**

# சிங்களத்தில் புகையிரத அனுமதி சீட்டுக்கள்

## தமிழ்ப் பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் கண்டனம்

உடுவில், திங்கள்

தமிழ்ப்பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் புகையிரதப் பகுதியினரால் சிங்களத்தில் அனுப்பப்படும் புகையிரத அனுமதிச்சீட்டு 'பில்களை' ரெயில்வே ஜெனரல் மனேஜருக்கு திருப்பி அனுப்பி வருவதாகத் தெரியவருகிறது

இது விஷயமாக உடுவில் கிராமசபை போக்குவரத்து அமைச்சருக்கு முறைப்பாடு செய்துள்ளதன்பேரில் திறைசேரி அதிகாரி புகையிரத அனுமதிச் சீட்டுகள் சிங்களத்தில்தான் எழுதப்பட வேண்டுமென்றும் அப்படி நடந்து கொள்ளாத உள்ளூராட்சிமன்றங்களுக்கு புகையிரத அனுமதிச்சீட்டுகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளாரெனவும் தெரியவருகிறது.

இதனைக் கண்டித்து எதிர்க்கட்சித் தலைவருக்கும், நிதிமந்திரிக்கும, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பிரதம மந்திரிசுக்கும் புகார் செய்ய வேண்டுமென்ற தீர்மானம் உடுவில் கிராமசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# "இந்திய-பாக். தகராறில் வெளியார் தலையிடு கூடாது"

## குவாய்த் பிரதமர் கருத்து

புதுடில்லி, நவ. 30

இந்திய—பாகிஸ்தான் தகராறுகள் வெளிநாட்டுத் தலையீடின்றி இருநாட்டு அரசாங்கங்களினாலும் தீர்க்கப்பட வேண்டுமென்று குவாய்த் பட்டத்து இளவரசரும் பிரதம மந்திரியுமான ஷேக் சபா அல் சலீம் அல் சபா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பன்னிரண்டு தினங்கள் சுற்றுப்பிரயாணம் செய்த குவாய்த் பிரதமர் நாயகம் திரும்பியுள்ளார். இந்தியாவில் அவருக்கும் பிரதமர் சாஸ்திரிக்குமிடையே கைச்சாத்தான கூட்டறிக்கை விபரம் நேற்று குவாய்த் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

"இந்தியாவும் குவாய்த்தும் சகலதுறைகளிலும், சர்வதேச பிரச்னைகளிலும ஒரே கொள்கையைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றன அண்மையில் நடைபெற்ற கெய்ரோ மகாநாட்டிலும் இரு நாடுகளும் ஒரே வழியில் சமாதானத்துக்காகப் பாடுபட்டிருக்கின்றன இரு நாடுகளின் உறவுகளும் மேலும் வலுப்பெறும்" என்று அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேட்பாரற்றுக்கிடந்த கார் களவாடப்பட்டதா?

மாவிட்டபுரம், திங்கள்

புன்னாலைக் கட்டுவனில் மூன்று தினங்களாகக் கேட்பாரற்றுக்கிடந்த சுமார் 12000 ரூபாய் பெறுமதியானதும், ஈ. எல். 8467 இலக்கம் பொறித்த ஒஸ்ரின் கேம்பிரிச் காரை சுன்னாகம் பொலிஸார் கைப்பற்றி பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளார்கள்.

இக்காரை இனம் தெரியாத சிலர் புன்னாலைக் கட்டுவனில் உள்ள திருமதி பூரணம் சுப்பிரமணியம் என்பவரின் காணிக்குள் கொண்டுவந்து விட்டு விட்டு, பெற்றோல் வாங்கிக் கொண்டு வருவதாகக் கூறிச் சென்றதாகவும், மூன்று தினங்களாக அவர்கள் திரும்பி வராமையினால் சந்தேகங் கொண்ட காணிச சொந்தக்காரர் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

ஈ என். தொடரில் இருக்க வேண்டிய இக்காரின் இலக்கத் தகடு ஈ. எல். தொடரில் இருந்தமையினால் சந்தேகம் கொண்டு இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு கார் பற்றிய தகவலை அறிவித்துள்ளனர்.

கெக்கிராவையில் இடம் பெற்ற ஒரு திருட்டில இக்கார் இப்போது உள்ள இலக்கத் தகட்டுடன் உபயோகிக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. இக்காரின் உண்மையான இலக்கம் என்ன என்று தெரியாமையினால் இக் காரின் சொந்தக்காரர்கள் யார் என்று இன்னும் கண்டுபிடிக்கவில்லை என அறியப்படுகிறது கொழும்பிலிருந்து வந்த இரகசிய பொலிஸார் காரில் உள்ள விரல் அடையாளங்களை புகைபடம் எடுத்துச் சென்றுள்ளார்கள், இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸாரும் கெக்கிராவை பொலிஸாரும் விசாரணை செய்து வருகிறார்கள்.

## 'பௌத்தருக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

மகாநாட்டை ஆசீர்வதித்த தலாய்லாமா, இன்று காலை புத்தரின் புனித சின்னங்களைப் பார்வையிட்டார். இந்தப் புனித சின்னங்கள், 1918-ம் ஆண்டிலும் 1329-ம் ஆண்டிலும் கண்டுபிடிக்கப்பட்டன.

### பிரதமர் வாழ்த்து

புத்தர் முதலாவது போதனை நிகழ்த்திய சாரனாத்தில் உலக பௌத்த மகாநாடு நடைபெறுவது விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது என இலங்கைப் பிரதமர் மகாநாட்டுக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியிருக்கிறார்.

"சமீபத்தில் அனகாரிக தர்மபாலவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிய இலங்கைக்கு சாரனாத்தில் இந்த மகாநாடு நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இலங்கை பௌத்த மக்களின் சார்பாக மகாநாட்டுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றும் அவர் தன் செய்தியில் கூறியிருக்கிறார்.

## மீன்பிடித்துறை நிறுவ முடிவு

நாத்தாண்டியா, திங்கள்

சேர் அல்பேர்ட் பீரிஸ், நாத்தாண்டியா எம். பி. கூறிய ஆலோசனையின்படி அதிகாரிகள் தொடுவாவா என்ற இடத்தில் ஒரு மீன்பிடிக்கும் துறையை ஸ்தாபிக்க இணக்கம் தெரிவித்துள்ளார்கள். இத்திட்டத்தை அரசாங்க அதிபர் தலைவராகக் கடமையாற்றிய ஒரு கமிட்டி சிபார்சு செய்துள்ளது.

## கடற்கரையில் ஓவல்டின்கள்

### அந்நியேட்டி கோஷ்டியினர் ஏகாக விடுதலை!

மாவிட்டபுரம், திங்கள்

கீரிமலைக்கு சமீபத்திலுள்ள சேந்தாங்குளம் கடற்கரையில் 22 ஓவல்டின்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்நியேட்டி செய்வதற்காகச் சென்ற ஒரு கோஷ்டியினர், அந்நியேட்டிசெய்து கொண்டிருக்கையில் கடலில் சில 'ஓவல்டின்'கள் மிதந்து வரக்கண்டனர் என்றும் பின்னர் அருகிற் சென்றுபார்த்தபொழுது கடற்கரையில் ஏராளமான ஓவல்டின்கள் கிடக்கக் கண்டனர் என்றும் கூறப்படுகிறது. அந்தச் சமயத்தில் அவ்வழியே வந்த இராணுவ வீரர்கள் ஓவல்டின்களைக் கைப்பற்றி, அந்நியேட்டி செய்யவந்த கோஷ்டியினரையும் சந்தேகத்தின் மீது கைதுசெய்தனர்.

பின்னர் இவர்கள் காங்கேசன்துறை சுங்கப்பகுதியில் ஒப்படைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

## பத்திரிகை மசோதா எதிர்ப்பு

சாவகச்சேரி, திங்கள்

"ஒரு குறிக்கப்பட்ட பத்திரிகை ஸ்தாபனத்தை விசேஷ மசோதாவின்மூலம் இந்த அரசாங்கம் சுவீகரிக்க முயல்கிறது. அந்த ஸ்தாபனத்தை ஆட்சியில் உள்ளவர்கள்,ஜனநாயக ஆட்சிக்குச் சாவுமணி அடித்து தங்கள் குடும்பச் சொத்தாக்க முயல்கின்றார்கள்" என்று சாவகச்சேரித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரி இளைஞர் முன்னேற்றச் சங்கத்தினரின் ஆதரவில் நடைபெற்ற பத்திரிகை மசோதா எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். வரியிறுப்போர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. ஆறுமுகம் தலைமை வகித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களினது இன உரிமைப் போராட்டங்களை நடாத்தும்பொழுது அவர்களது கொள்கைகளைத் தாக்க இந்த குறிப்பிட்ட ஸ்தாபனப் பத்திரிகைகள் தயங்கவில்லை. ஆனாலும் எல்லாப் பத்திரிகைகளும் சுதந்திரமாகத் தனித்தியங்க வேண்டுமென்பதே எங்களது அடிப்படைக்கொள்கையாகும்" என்றார்.

வேறு சிலரும் பத்திரிகை மசோதாவை எதிர்த்துப் பேசினர்.

## கடலில் விழுந்து சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த செல்வராஜா தேவதாஸ் என்னும் நாலு வயதுடைய சிறுவன் நேற்று காலை கடற்கரைக்கு அருகாமையிலுள்ள அணைக்கட்டில் நின்று விளையாடிக்கொண்டு நிற்கும் பொழுது தற்செயலாக கடலில் விழுந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதற்கு முன்னர் மரணமானார். மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் விபத்தினால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளித்தார். பிள்ளைகளில் பெற்றோர் கவனமாய் இருத்தல் வேண்டுமென்றும் கண்டபடி திரியவிடக்கூடாதென்றும் மரண விசாரணையின்போது திரு ஏ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

## கூட்டுறவுச் சங்கம்

சுன்னாகம், திங்கள்

வலிகாமம் வடக்கு கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் புதிய சங்கம் ஒன்றை சுன்னாகம் தெற்கில் தொழிலாளர்கள் அமைத்துள்ளனர்.

# "குருஷ்சேவின் வீழ்ச்சி மகத்தான வெற்றி"

## யாழ். பிரதேச கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் கருத்து

யாழ்ப்பாணம் செவ்

"பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழும், மன்னர் ஆட்சிகளின் கீழும், அல்லற்பட்ட அல்பேனிய மக்கள் இரண்டாவது உலக யுத்த காலத்தில் முசோலினியின் தலைமையின் கீழிருந்த நாஜி வெறியர்களுக்கு முதலில் பலியானார்கள், அன்றைய கால கட்டத்தில் தமது நாட்டின் விடுதலைக்காக வீரமிகு போராட்டத்தை நடத்திய அல்பேனிய மக்கள் சோவியத் செஞ்சேனை கிழக்கு ஐரோப்பிய நாடுகளை விடுதலை செய்த போது அல்பேனிய மக்கள் குடியரசு உதயமாகியது" என்று அல்பேனிய விடுதலைத் தினத்தைக் கொண்டாடு முகமாக, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாண பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் திரு. வி. ஏ. கந்தசாமி பேசும்போது தெரிவித்தார்.

திரு எஸ். மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. வி. ஏ. கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

குருஷ்சேவும் அவரது கையாட்களும் அல்பேனியாவுக்கு எதிராக சகலவிதமான நெருக்கடிகளைக் கையாண்ட பொழுதிலும் அல்பேனிய மக்களும், அல்பேனிய தொழிற் கட்சியும் ஏகாதிபத்தியவாதிகளிடம் மண்டியிடாமல், தங்கள் சுய முயற்சிகளின் மூலமும், சொந்த மக்களில் நம்பிக்கை வைத்து முன்னேறுவதின் மூலமும், சோஷலிஸ சமூக அமைப்பைக் கட்டியமைப்பதில் பெருமளவு முன்னேறியுள்ளார்கள்.

அல்பேனிய மக்களும் உலகம் முழுவதுமுள்ள மார்க்ஸிஸ லெனினிஸ வாதிகளும் நடத்திய போராட்டத்தின் மூலமாக குருஷ்சேவ் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது மகத்தான வெற்றியாகும். ஆகவேதான் அல்பேனிய மக்களின் 20-வது விடுதலைத் தினத்தை உலக மக்கள் பேருவகையுடன் இன்று கொண்டாடுகின்றார்கள். திரு இளங்கீரனும், மற்றும் பலரும் பேசினர்கள்.

## சாதி ஒழிப்பு குழுவின் முயற்சி

கல்லூர், செவ்வாய்

வடபகுதியில் பிரசித்தி பெற்று விளங்கும் சைவாலயங்களை சிறுபான்மையினருக்குத் திறந்துவிடும் முயற்சியுல் சாதி ஒழிப்புக்குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளார்,

யாழ்ப்பாண முன்னாள் மேயர் திரு. டி எஸ். துரைராஜா, முன்னாள் செனேட்டர் ஜி நல்லையா நியாயவாதி திரு. சி கதிரவேற்பிள்ளை ஆகியோரைக் கொண்ட கோஷ்டியொன்று இவ்விஷயத்தில் கடந்த சில தினங்களாக நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறையில் இக்கோஷ்டியினர் தமது பிரசார வேலைகளை ஆரம்பித்தனர். காங்கேசன்துறைத் தொகுதியில் பிரசித்தி பெற்ற 'ஆலயங்'களாக விளங்கும் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில், கீரிமலைச் சிவன்கோவில் பரிபாலன நிர்வாகிகளுடன் சிறுபான்மையினர் நுழைய அனுமதிக்கும்படி கோரி பல பிரமுகர்கள் இக்கோஷ்டியினரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆலய சிர்வாகிகள் இது விஷயமாகக் கலந்து பேசமுன்னர் மக்களின் கருத்தை அறிவதில் இக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

தீண்டாமையை தமிழர்கள் மத்தியிலிருந்து விரட்டியடிக்கும் வகையிலான பிரசாரக் கூட்டங்கள் சாதி ஒழிப்புக் குழுவினரால் விரைவில் நடத்தப்படவிருக்கின்றன. தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்படுகின்றன.

சிறுபான்மையினரின் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக வலிகாமம் வடக்கிலுள்ள பொது மக்களின் அபிப்பிராயங்களை அறிவதற்கான மகாநாடு ஒன்றினை விரைவில் வலிமேற்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை மேற்கொள்ளவிருக்கிறார்.

## 'ராஜபக்ஷ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி சேரமிடமும் ராஜபக்ஷ ஒன்றும் கேட்கவில்லை.

சேரமுடன் வியனகேயைத் தொடர்பு படுத்தக்கூடிய வகையில் தாம் இனி பாங் விதியிலோ அல்லது கின்ரோஸ அவெனியுவிலோ தேள்விகேட்கவில்லையென்பதனையும் ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டுள்ளார். இவ்விதம் கேள்விகளைக் கேட்டிருந்தாரெனில் அவர் தாம் உளவாளியாக இருந்தாரென்பது ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கலாம்.

1962-ம் வருடம் ஜனவரி 11-ந் திகதிக்குப் பின்னர் தாம் இடம் பெற விருந்த சதிபற்றி திரு. என். கியூடயஸ் உட்பட 15 பேருக்கு முன் எச்சரிக்கை செய்திருந்ததாக ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் உண்மையில் இவ்விதம் ராஜபக்ஷ எச்சரிக்கை செய்யக்கூடிய விதத்தில் ஒன்றுமே இடம் பெறவில்லை.

ராஜபக்ஷவின் கூற்றுக்களை உறுதிபடுத்த வந்த 4 சாட்சி இதற்கு மாறாகவோ அல்லது சார்பாக சாட்சியமளிக்கையில் சந்தேகத்திடமாகவோ சாட்சியங்கள் அளித்துள்ளனர். ராஜபக்ஷ கொண்டிருந்த அச்சத்துக்கு சாட்சிகளின் சாட்சியங்கள் உறுதிப் படுத்தவில்லை.

## ஹிந்தி இணைப்பு மொழியாகும்

புதுடில்லி, நவ. 30

ஹிந்தியை இணைப்பு மொழியாகவும், ஆங்கிலத்தை சர்வதேச மொழியாகவும் ஆக்க அரசாங்கம் விரும்புகிறது என கல்வி மந்திரி திரு. சக்ளா இன்று லோகசபையில் கூறினார்

ஹிந்தியையும், பிராந்திய மொழிகளையும் வளக்கப்படுத்துவதும் அரசாங்கத்தின் உத்தேசம் என அவர் கூறினார்.

இணைப்புமொழியாக ஹிந்தி வளர்ச்சி பெறும் வரை ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்றும் சக்ளா கூறினார்.

## சுயதேவை பூர்த்தி

கோலாலம்பூர், நவ. 30

உணவு உற்பத்தியின் சுயதேவையைப் பூர்த்திசெய்யும் நோக்குடன், மலேசிய அரசாங்கம் நேற்று இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளது. சீனி, அரிசியில் சுயதேவைப்பூர்த்தி பெறுவதே முக்கிய குறிக்கோளாக விருக்கும்.

மலேசியாவில் 60 சத விகித அரிசி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்கிழக்காசியாவில், மலேசியாவில் தான் மிகக்கூடுதலான அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 93ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.